# சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
# வாராந்த பாடசாலை

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

பாடம் : சித்திரம்

வாரம் : 03

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவு செய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து , இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **இலங்கையின் பாரம்பரிய அரக்குத்தொழில் தொடர்பான கலை நிர்மாணிப்புக்களை கற்றறிந்து நயந்துரைப்பார்**

**செயற்பாடு** : **அரக்கு நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்.**

## (வாசிப்புப் படிவம்)

### வரலாற்று பின்னணி

கண்டி காலத்தில் அரக்குத் தொழில் பிரபல்யமடைந்து காணப்பட்டதாக சான்றுகள் உள்ளன. **"கோட்டல்பத்த"** எனப்படும் அரச தொழினுட்ப பிரிவில் இவர்கள் பணியாற்றியுள்ளனர்.இங்கே இவர்கள் **"ஹங்கிடிவசம"** என குறிப்பிடப்பட்டனர். இத்தொழிலில் ஈடுபடும் கலைஞர்கள் **"ஹங்கிடியன்"** என அக்காலத்தில் அழைக்கப்பட்டனர்.

### அரக்குத் தொழிலுக்குப் புகழ்பெற்ற பிரதேசங்கள்

| | | |
|---|---|---|
| மாத்தளை | - | ஹப்புவித |
| தங்கல்லை | - | அங்குல்மடுவ |
| கண்டி | - | கூரிகடுவ |
| பலாங்கொடை | - | பல்லேகந்த |

இருந்தபோதும் இத்தொழில் தற்போது மாத்தளை - ஹப்புவித பகுதியிலேயே அதிகளவில் செயற்பட்டு வருகிறது.

### மூலப்பொருட்கள்

அரக்குத் தொழிலுக்கு **"லாக்ஷா"** எனப்படும் ஒருவகை பூச்சியினத்தில் இருந்து பெறப்படும் அரக்கு, மூலப்பொருளாகப் பயன்படுகிறது.

### மூலப்பொருட்களைத் தயார்படுத்திக்கொள்ளும் விதம்

**லாக்ஷா** எனப்படும் பூச்சியிலிருந்து சுரக்கும் ஒருவகைப் பிசின் வளியின் தாக்கத்தினால் இறுகி அரக்கு எனும் நிலையை அடையும். அப்பிசின் வகை காணப்படும் மரக்கிளைகளை வெட்டி வெயிலில் உலரவிடப்படும்.பின்னர். ஆவற்றில் காணப்படும் அரக்கை கத்தி போன்ற கூரான ஆயுதமொன்றில் சுரண்டி எடுக்க வேண்டும். பின்னர் பருத்தித் துணியொன்றில் அவற்றை இட்டு இறுக முடிச்சிப்போட வேண்டும். அதன் பின்னர் அடுப்புக்கு மேலே பிடித்து உருகும் போது தூய அரக்கை பிழிந்தெடுக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட அரக்கு திரும்பவும் உருக்கி துண்டுகளாக்கப்படும்.

### சாயம் பெறப்படும் விதம்

| | | |
|---|---|---|
| சிவப்பு | - | சாதிலிங்கம் தூள் |
| கறுப்பு | - | விளக்குக் கரி, அல்லது கெக்குண கரி |
| மஞ்சள் | - | ஹிரியல் (ஒருவகை மண்) |
| பச்சை | - | மஞ்சள் ஹிரியல்லுடன் நீலம் சேர்க்கப்படும். |

தயார்படுத்திய அரக்கை இரு கம்புகளை இணைத்து வெப்பமேற்றி சாயம் பதம் பெறும் வரை இழுத்து, நார் வடிவில் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### அரக்கின் உபயோகம்

மரத்தாலான பொருட்களின் மேற்பரப்பை அலங்கரிப்பதற்காக மட்டும் அரக்கு உபயோகப்படும்

### கலைப்பாணி வகை

இருவகை நுட்பமுறைகளைப் பயன்படுத்தி அலங்கார வேலைப் பாடுகள் இடப்படுகின்றன.

### நகவேலை

இங்கே அரக்கு நார்கள் உபயோகித்து அலங்கார வேலைப் பாடுகள் இடப்படுகின்றன.வெப்பமேற்றிய அரக்கை விரல்களால் இழுத்து இவ்வகை நீளமான நார்கள் பெற்றுக்கொள்ளப்படு கின்றன. ஒரு வர்ணத்தால் ஆன நார்களை பொருள் மீது ஒட்டிய பின் ஏனைய வர்ணங்களால் ஆன நார்களால் அதன் மீது அலங்கார வேலைப்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. இதற்காக நகத்தை உபயோகப்படுத்துவதால் இம்முறை நகவேலை (நியபொது வெட) எனப்படும்.

### பட்டரை வேலை (பட்டல் வெட)

பட்டடை மீது வைக்கப்பட்ட பொருள் சுற்றி வரும் போது வெப்பமேற்றிய அரக்கு அதன் மீது பிடிக்கப்படும்.அப்போது அரக்கானது சீரான முறையில் பொருள் மீது ஒட்டிக்கொள்ளும். பாரியளவில் பொருள் உற்பத்தி செய்கையில் இம்முறை உபயோகப்படும்.இவ்வாறு ஒரு வர்ணத்திலான அரக்கு நார் முதலில் பொருள் மீது ஒட்டப்படும். பின்னர் அதற்குப் பொருந்தும்படி அலங்கார வேலைப்பாடுகள் பொருள்மீது இடப்படும்.

### அரக்குத் தொழிலில் உபயோகிக்கப்படும் அலங்கார அலகுகள்

வெல்பொத்த, லணுதங்கய, கல்பிந்து, அரச இலை, பலாபெத்தி (தாமரை இதழ்கள்), பிந்து, குந்திரிக்கன், தனியிழை, ஈரிழை

### அரக்கு உபயோகித்து அலங்கரிக்கப்படும் பண்டங்கள்

ஆலவட்டத்தின் கைப்பிடி, கொடிகளின் கைப்பிடி, ஈட்டிப்பிடி, பீரலு, ஊன்றுகோல், விசிறியின் கைப்பிடி, உடுக்கை

1.அரக்குக் கைத்தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடங்களைக் குறிப்பிடுக.

2.அரக்குக் கைதடதொழிலுக்கு உபயோகப்படுத்தப்படும் மூலர்பொருட்களைக் குறிப்பிடுக.

3.அரக்கை உபயோகித்து அலங்கரிக்கப்படும் பாவனைப் பொருட்கள் 5 குறிப்பிடுக.

4.அரக்கு பொருட்களுக்கு பயன்படுத்தப்படும் அலங்காரங்கள் 5 குறிப்பிடுக.

5.அரக்குத் தொழிலின் தொழினுட்ப முறைகள் பற்றி சுருக்கமாக எழுதுக.